1975 அக்டோபர் 31]

கொள்ளவும் நமக்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னும் இந்தப் பயிற்சித் திட்டத்தை நாம் செயல்படுத்தவே இல்லை. இந்த ஆண்டு நவம்பர், டிசம்பரில் நடத்தலாம் என்று இருக்கிறோம்.

கோதைமங்கலம் கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

* 165 **வினா—புலவர் சி. பழனிச்சாமி :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பழனிக்கருகில் உள்ள கோதை மங்கலம் கிராம அரிசன மக்கள் வீட்டுமனைகள் கேட்டு அண்மையில் விண்ணப்பித்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள பழனி வட்டத்தைச் சேர்ந்த கோதைமங்கலம் கிராமத்தில் 21 வீடில்லாத ஏழை அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்கு 1.22 ஏக்கர் நிலத்தை மந்தை புறம்போக்கிலிருந்து நத்தமாக மாற்றியபின், அரிசனங்களுக்கு வீட்டுமனை பட்டா கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துவருவதாக மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் கோதைமங்கலம் கிராமத்திலிருக்கிற அரிசன மக்களிடத்திலிருந்து அரசுக்கு எப்பொழுது ரெப்ரசன்டேஷன் வந்தது ? எப்பொழுது இந்த மந்தைப் புறம்போக்கு நத்தைப் புறம்போக்காக மாற்றப்படும் ? அவைகளைத் துரிதமாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : 1973-74-ம் ஆண்டு அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறிப்புப்படி இப்பொழுது எடுத்துக் கொடுத்து விடுவார்கள் என்று தெரிகிறது, கொடுத்து விடுவார்கள் என்றும் நம்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரிசனங்களுக்கு வீட்டு மனையைக் கையகப்படுத்துவதற்காகத் தற்பொழுது பின்பற்றப்படும் விதிமுறையினால் நீண்டகாலம் தாமதம் ஆகிறது. அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.